# இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்படும் இலங்கைத் தேயிலை மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளின் இறக்குமதிகள் மீதான தற்காலிக கட்டுப்பாடுகள் நீக்கப்படுதல்

ரஷ்ய கூட்டமைப்பின் இலங்கைக்கான தூதுவருடன் இணைந்து விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக இலங்கை தேயிலை சபையின் தலைவரால் தலைமை தாங்கப்பட்ட ஒன்பது பேர் கொண்ட இலங்கை தொழில்நுட்பக் குழுவானது, கடந்த 2017 டிசம்பர் 25ஆந் திகதியன்று கால்நடை மற்றும் தாவர நல கண்காணிப்புக்கான (ஹொஸெல்கொஸ்நட்ஸோ) ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர், தாவர நல விடயங்களுக்கு பொறுப்பாகவுள்ள ஹொஸெல்கொஸ்நட்ஸோ பிரதி தலைவர் மற்றும் ஹொஸெல்கொஸ்நட்ஸோ இன் ஏனைய அதிகாரிகள் ஆகியோருடன் அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சந்திப்பில் ரஷ்ய விவசாய அமைச்சு, ரஷ்ய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ரஷ்யாவின் ரஸ்டீ கோப்பிச் சங்கம் (ரஷ்ய தேயிலை மற்றும் கோப்பி சங்கம்) ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பூச்சி அற்ற தாவர உற்பத்திப் பொருட்களை ரஷ்யாவுக்கு அனுப்புவதை உறுதிப்படுத்திய இலங்கைத் தரப்பினரால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ரஷ்ய தரப்பினர் தமது திருப்தியை சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தாவர நலக்காப்பு நடைமுறைகளுடன் ஈடுபடுவதற்காக 2018 ஜனவரி பிற்பகுதியிலும், பெப்ரவரி முற்பகுதியிலும் ரஷ்யாவிலிருந்து தொழில்நுட்ப நிபுணர் குழாமொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும் இதன்போது இணங்கிக் கொள்ளப்பட்டது.

1978 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இனங்காணப்பட்டுள்ள இவ் வண்டு தொடர்பான எந்தவொரு பதிவும் இடம்பெற்றில்லை எனவும், இது பெரும்பாலும் கிருமி நீக்கப்படாத கொள்கலன் பாவனை காரணமாக ஏற்பட்டது எனவும் இலங்கைத் தரப்பினர் சுட்டிக்காட்டினர். இருந்தபோதிலும், இவ்வகையான தவறுகள் மீள நிகழ்வதை தவிர்ப்பதற்காக தற்போதைய தாவர நலன் காப்பு நடைமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கைத் தரப்பினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கைத் தரப்பினரின் கரிசணைகள் மற்றும் முன்னோக்கிய நிலையை விளங்கிக் கொண்டு 2017 டிசம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தாவர உற்பத்திகள் மீது விதிக்கப்பட்ட தற்காலிக கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான தீர்மானத்தையும் ரஷ்ய தரப்பினர் சுட்டிக்காட்டினர். இலங்கையின் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதமானது, இந்நிலைமை தொடர்பில் சாதகமான தீர்மானத்தை எடுப்பதில் பெரிதும் தாக்கம் செலுத்தியிருந்தது.

பெருந்தோட்டத்துறை அமைச்சு, விவசாய அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கைத் தேயிலை சபை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை மற்றும் தேசிய தாவர நலன் காப்பு சேவை ஆகியவற்றின் தலையீடானது முன்னர் விதிக்கப்பட்ட தற்காலிக கட்டுப்பாடுகளை விரைவாக நீக்குவதில் வலுவான தாக்கத்தை செலுத்தியிருந்தது.

ஒரு பொதுவான குறிப்பாக கால்நடை மற்றும் தாவர நல கண்காணிப்புக்கான கூட்டமைப்பு சேவையினால் இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் குறித்த கட்டுப்பாடுகளுக்கான சராசரி கால அளவு 3 - 4 மாதங்கள் அல்லது அதற்கு மேலானதாகும். இருந்தபோதிலும், இவ்விடயத்தைப் பொருத்த வரை, இந்த கட்டுப்பாட்டினை அதிகரிப்பதற்கு ரஷ்ய தரப்பினருக்கு ஒரு வார காலமே ஆகியுள்ளதுடன், தொடர்புடைய தரப்பினர்களின் வேகமான ஒத்துழைப்பு மற்றும் தலையீட்டிற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகக்குறுகிய காலப்பகுதியில் இவ் விடயம் தொடர்பான சாதகமான முடிவினை எட்ட முடிந்துள்ளமை குறித்து ரஷ்ய கூட்டமைப்புக்கான இலங்கைத் தூதுவர் மற்றும் இலங்கைத் தூதரகம் ஆகியன மகிழ்ச்சியடைந்துள்ளன.

ரஷ்ய கூட்டமைப்பிலுள்ள இலங்கைத் தூதரகம்

மொஸ்கோ

2017 டிசம்பர் 25